# 31ம் நாள் நினைவாக..!



சுன்னாகம் மலப்பையை பிறப்பிடமாகவும்
லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் . தம்பையா செல்லம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

20.08.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், சுன்னாகம் மலப்பையைப் பிறப்பிடமாகவும்,
லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். தம்பையா செல்லம்மா

அவர்களின்

## சிவபதப் பேறு குறித்த

31ம் நாள்

## நினைவு மலர்

## 20.08.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பரமனடி போயடைந்த
பாசமிகு தாயவரே!

வையகம் தன்னில் வந்து
மாண்பு மிகு தெய்வமாகி
உலகத்தில் உயர வைத்த
எங்கள் தெய்வமே!

நெக்கு நெக்குருகி நெஞ்சம்
நீர்மல்க மீளாத்துயில் கொண்டு
இறைவனடி சேர்ந்த தெய்வமே
உம் ஆத்ம சாந்திக்காய்
இம்மலரை சமர்ப்பிக்கின்றோம்.

*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவாக...!



மண்மகிழ
1929
05
10

கண்நெகிழ
2014
07
21

அமரர்

# தம்பையா செல்லம்மா

## திதி வெண்பா

ஜய வருடமதில் ஆன ஆடி இருபத்தொன்றில்
அபரபக்ஷ தசமியிலே செல்வச் சிறப்புடைய
செல்லம்மா ஆண்டவன் தாள் சேர
யாக்கை விட்டு பரமனடி சேர்ந்தாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து!



## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நாடகத்தால் உன்னடியார்போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையார்த் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோகியசுந்தரனே.

## திருப்பல்லாண்டு

தாயைத் தாளறவீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடுமுடனே
பூதலத்தாரும் வணங்கப் பொற்கோவிலும் பாசனமுமருளிச்
சோதிமணி முடித்தாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே (ல்)
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ யாடும் போதுன தடியின் கீழ் இருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கை கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெல்ல வரு சோலைக் குயிலாலே
மெய்யுருக மானை தருவாயே
தெள்ளு தமிழ் பாட தெளிவோனே
செய்ய குமரேச திறளோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளன் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்ய குறைவிலா உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**"வெற்றி என்பது**
**தாகத்துக்கு நீர் போல,**
**உரிய காலத்தில் பெறவேண்டியது,**
**காலம் பிந்திய**
**வெற்றியும் ஒருவகையில்**
**தோல்விதான்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். தம்பையா செல்லம்மா அவர்களின் வாழ்வியல் சுவடுகள்



இந்துமா சமுத்திரத்தின் மாங்கனியாம் இலங்கைத் தீவின் ஈழத்திரு நாட்டின் வடபுலத்தே சீரோங்கு திகழும் யாழ்ப்பாணத்தின் விவசாயத்தின் விளை நிலமாம் கோயில்கள் குடிகொண்டிருக்கும் சுன்னாகம் கிழக்கு ஞானவைரவர் அருள் பாலிக்கும் மலப்பையிலே அமரர் சரவணமுத்து சின்னப்பிள்ளை தம்பதியினரின் நான்காவது திருமகளாய் 1929ம் ஆண்டின் வைகாசித் திங்களின் பத்தாம் திகதி திருஅவதாரம் கொண்டவரே செல்லம்மா என்னும் நல்லாள் ஆவார்.

சைவக் குலத்தே பிறந்த செல்லம்மா இராசா உருக்குமணி, கனகரத்தினம், கமலம் என்போரை உடன்பிறந்த சோதரர்களாய் கொண்டிருந்தார். பிறந்து தவழ்ந்து மொழி பேசி பின் கல்வியினை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் கற்றார். துடிப்புடனே கல்விதனை கற்று முடிந்ததும் பெற்றோருக்கு உறுதுணையாக இருந்தார். பருவமெய்தி மணமுடிக்கும் நாளினை அடைந்தார். பெற்றோர் தகுந்த வரன்தேடி சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சின்னாச்சி தம்பதிகளின் செல்வப்புதல்வராம் தம்பையா என்பவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர் விவசாயத் திணைக்களத்தின் சாரதியாய் பணிபுரிந்து வாழ்ந்தார். செல்லம்மா நன்னாளில் தம்பையாவை கரம் பிடித்தார். தன் கணவனுடன் இல்லறத்தை நல்லறமாக நடாத்தியதன் பேறாக ரஞ்சினி, ரவீந்திரன், ரசி, ரதி, ராதை, ராகினி எனும் புதல்வர்களை பெற்றெடுத்தார். கண்ணை இமை காப்பது போல் தன் பிள்ளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தார். பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்து சீரும் சிறப்புடன் வாழ வழி தேடி வைத்தார். தெய்வ அனுக்கிரகம் கூடி வர எல்லாப் பிள்ளைகளிற்கும் தகுந்த மணாளர்களைத் தேடிக் கைபிடிக்க வகை செய்தார்.

மூத்த மகளாம் ரஞ்சினி குணக்கொழுந்தாம் குலசேகரனை மணந்து இல்லறம் நடாத்தி பிரியங்கா, பிரதீபாவை பெற்றெடுத்தாள். இரண்டாவது மகன் ரவீந்திரன் சுகந்தியை கரம் பற்றி இல்லறத்தை நடாத்துகிறார். மூன்றாவது மகள் ரசி ரவீந்திரனை மணஞ்செய்து கார்த்தியா, கிரிசாந் எனும் புதல்வர்களை பெற்றார்கள். அடுத்த மகள் ரதி மகிந்தாவை கரம் பற்றி அதியன்ராஜா, ஆர்தன்ராஜா, ஆர்த்தி எனும் புதல்வர்களைப் பெற்றனர். ராதை எனும் மகள் லோகநாதனை பற்றி பிரியதர்சினி, பிரியாந்தியைப் பெற்றனர். கடைக்குட்டி ராகினி ரவீந்திரனை மணம் முடித்து வக்சன், தனுசன், சரன் எனும் புதல்வர்களைப் பெற்று எல்லோரும் வாழ்கின்றனர்.

இவரின் பிள்ளைகள் எல்லோரும் சீரும் சிறப்புடன் வாழ வழிவகுத்தார். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 2001ம் ஆண்டு இலண்டனுக்கு சென்றார். அங்கு சென்று தனது செல்ல மூத்தமகள் ரஞ்சினியுடன் வாழ்ந்து வந்தார். தனது தாய் சுகயீனமுற்ற போது தனது பிள்ளைகளை பராமரிப்பது போல் கண்ணை இமை காப்பது போல் பராமரித்து வந்தார். திடீரென ஏற்பட்ட சுவாசநோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி லண்டன் Newham General Hospital ல் 21.07.2014 காலை 6.00 மணியளவில் இறைவன் அடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்...!

இமைகளின் ஈரம் காயவில்லை
இதயத்து அழுகை இன்னும் ஓயவில்லை
பத்து மாதம் சுமந்தவளே
பாராது துயில் கொள்வதேனோ..?
கருவறையை தொட்டியாக்கியவளே
கண்மூடி தூங்குவதேனோ?
'அம்மா' அம்மா என்று அழைத்தவுடன்
அரவணைப்பாயே தொட்டு எமையே
தொப்புள் கொடி உறவை
தொலைத்து விட்டு
நீர்க்கதியாய் நாமிங்கு – நீரோ
நீள் துயில் கொள்வதேனோ..?
ஊட்டி வளர்த்தவளே
ஊமையாய் உறங்குவதேனோ..?
ஒரு கணம் எமை அணைத்து
ஒரு ஆறுதல் கூறாயோ அம்மா....



பிள்ளைகள்
ரஞ்சினி, ரவீந்திரன்,
ரசி, ரதி, ராதை, ராகினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல் ...!

மடிமீது சுமந்த பிள்ளைகளை
மகிழ்வுடன் எமக்களித்து
வாழ்விலே குறைவின்றி
வாழ வழி காட்டிய மாமியே!
காலமெல்லாம் எம்மோடு
களித்திருப்பாய் என்று இருக்க
காலன் அவன் கவர்ந்த செய்தி
காதினிலே அனலாய் புகுந்ததுவே
கண்ணீர் மழை சொரிகின்றோம்
கரம் கொண்டு நீர் துடைக்க
அருகில் வாராயோ
ஆசை மாமியே ....!

மருமக்கள்
குலசேகரம், சுகந்தி, ரவீந்திரன்,
மகிந்தா, லோகநாதன்,
ரவீந்திரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்...!

நிலாச்சோறு ஊட்டிய தாயே
நிலவும் நம் அழுகுரல் கேட்டு
முகாரி பாடுகின்றது
அம்மம்மா, அம்மம்மா என்று
ஆசையாய் அழைக்கையிலே
ஆறுதலாய் தலை வருடுவீரே
மழலை மொழி கேட்டு கன்னத்தில் முத்தமிட்டு
கதைகள் பல கூறியது கேட்கிறது இப்போ
பாதியிலே எங்களை பரிதவிக்க விட்டு
பாரை விட்டு சென்ற செய்தி
பாலர் எங்களை வாட்டுதம்மம்மா
விரைந்தோடி வந்து எம்மை
எப்போது அரவணைப்பீர் அம்மம்மா...!

பேரப்பிள்ளைகள்
பிரியங்கா, பிரதீபா, கார்த்தியா, கிரிசாந்,
அதியன்ராஜா, ஆர்தன்ராஜா, ஆர்த்தி,
பிரியதர்சினி, பிரியாந்தி, வக்சன், தனுசன், சரன்.

## உறவுகள் புலம்பல்

உயர்ந்த குடும்ப தலைவியாய்
உழைப்பின் சிகரமாய்
கற்றவரும் பொருள் பெற்றவருமே
வழுக்கி அழுகின்ற வாழ்வியலை
கற்றறிந்து பெரும் பயனை பெற்றவளே
அமரத்துவம் அடைந்த உம்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

ஈழத்து உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Remembrance of our grandma

*We fondly remember you grandma!*
*Your smiling face and sweet words are a pleasure to recall*
*You spoke so kindly to each of us*
*and you died beloved it by all of us.*
*Always so good, unselfish and kind*
*You will ever be with us grannie.*
*No words will carry the debts of our love before you.*
*We miss you a lot grandma.*
*Have peace in the hands of the almighty.*



**Granddaughters & sons**
*Piriyanga, Piratheepa, Karthiya, Aarthi,*
*Pooja, Sinthu, Kirusanth, Athiyan, Aarthan*
*Vakshan, Thanushan, Saran.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

*திருச்சிற்றம்பலம்*

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்த சஷ்டி கவசம்

**காப்பு**
**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி நூல்

**நிலைமாண்டிய ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மாஉபில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேன் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
எண்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிஉக்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பா நாடியை முனைவேல் காக்கா
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் ளென்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டியப் பாவையும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து சுவர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷயங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறருக்கொண்டு
ஓதியே செவித்து உகந்துநீ றணிண
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் தருளுவரை
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டடாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழிவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும் சின்னக்
குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



முற்றிற்று
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்திரி மந்திரம்

ஓம் புர் புவ ஸ்வ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்

## மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம்

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷிக மாம் ருதாத்
ஓம் ஹ்ரீம் நமசிவாய:

## ஆஞ்சநேயர்

ராம ராம நமோஸ்துதே
ஜெய ராம பத்ர நமோஸ்துதே
ராமராம நமோஸ்துதே
ஜெய வீர ராம நமோஸ்துதே
ஆஞ்சநேய நமோஸ்துதே
வைனதேய நமோஸ்துதே:
ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே
வாயுபுத்ராய தீமஹி
தந்நோ ஹநுமாந் ப்ரசோதயாத்:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டமா சித்திகள்

1. அணிமா – அணுவைப் போல சிறிதான தேகத்தை அடைதல்
2. மகிமா – மலை போல் பெரிதாகல்
3. இலகிமா – காற்றைப் போல இலேசாய் இருத்தல்
4. கரிமா – மலைகளாலும் வாயுக்களாலும் அசைக்க முடியாது பாதுகாத்தல்.
5. பிராத்தி – மனத்தினால் நினைத்தவை யாவும் தன்முன்னே அடையப் பெறுதல்.
6. பிராகாமியம் – கூடுவிட்டு கூடு பாய்தல்
7. ஈசாத்துவம் – நான்முகன் முதலான தேவர்களிடம் தன் ஆணையைச் செலுத்துதல்
8. வசித்துவம் – அனைத்தையும் வசப்படுத்தல்.

## நாற்படை

1. தேர்ப் படை
2. குதிரைப் படை
3. யானைப் படை
4. காலாற் படை

## ஐம்பெருங் காப்பியங்கள்

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

## ஐவகை நிலங்களும் பண்புகளும்

1. மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமும்
2. முல்லை – காடும் காடு சார்ந்த இடமும்
3. குறிஞ்சி – மலையும் மலைசார்ந்த இடமும்
4. பாலை – மணலும் மணல் சார்ந்த இடமும்
5. நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவு விழாக்கள்

| | | |
|---|---|---|
| 10 வது ஆண்டு | - | தசரவிழா, தசாப்தவிழா |
| 25வது ஆண்டு | - | வெள்ளி விழா |
| 50வது ஆண்டு | - | பொன்விழா |
| 60 வது ஆண்டு | - | மணிவிழா, வைரவிழா |
| 75 வது ஆண்டு | - | பவள விழா |
| 100 வது ஆண்டு | - | நூற்றாண்டு விழா |

"டாவின்சி' யின் வெற்றிப்பாதைக்கு 'SMART'

| | | |
|---|---|---|
| S | - | Specific |
| M | - | Measurable |
| A | - | Accountability |
| R | - | Realistic / Relevant |
| T | - | Time line |

| | |
|---|---|
| S | எது வேண்டும் என்று குறிப்பாக அறிந்திருத்தல். |
| M | அளவிடத்தக்கதாக இலக்குகளை கொள்ளுதல் |
| A | இலக்குகளை எட்ட தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றல் |
| R | இலக்குகளை யதார்த்தமாகவும் பொருத்தமாகவும் அமைத்தல் |
| T | இலக்குகளை எட்ட கால எல்லைகளை நிர்ணயம் செய்தல். |

## எண்களுக்குரிய அதிஷ்ட கற்கள்

| | | |
|---|---|---|
| 1. | Ruby | மாணிக்கம் |
| 2. | Pearl | முத்து |
| 3. | Topaz | புஸ்பராகம் (மஞ்சள்) |
| 4. | Sapphire | நீலக்கல் |
| 5. | Diamond | வைரம் |
| 6. | Emeralds | மரகதப்பச்சை |
| 7. | Lapi lazuli | வைடூரியம் |
| 8. | Amethyst | செவ்வந்திக்கல் |
| 9. | Coral | பவளம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பழமொழிகளும் அவற்றுக்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
The face is index of the mind.

2. நிழலின் அருமை வெயிலில் தெரியும்
Bleesing aren't valved till they are gone.

3. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
Make hay while the sun shines.

4. அவனின்றி அணுவும் அசையாது
No leaf moves but wills it.

5. நெருப்பின்றி புகையாது
No smoke without fire.

6. உண்மை நட்பை ஆபத்தில் அறியலாம்
A friend is need is a friend indeed.

7. இட்டுக் கெட்டவர் எங்கும் இல்லை
Good deeds are never lost.

8. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
Let deeds are never lost.

9. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
Youthfull impressions last through life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 Selvam

| | | | |
|---|---|---|---|
| 1. | Kalvi | - | Education |
| 2. | Arivu | - | Knowledge |
| 3. | Aayul | - | Longevity |
| 4. | Aatral | - | Dexterity |
| 5. | Ilamai | - | Youth |
| 6. | Thunivu | - | Valor |
| 7. | Perumai | - | Respect |
| 8. | Pon | - | Gold |
| 9. | Porul | - | Wealth |
| 10. | Pugal | - | Fame |
| 11. | Nilam | - | Land |
| 12. | Nanmakkal | - | Good progeny |
| 13. | Nalloolukam | - | Good surrounding |
| 14. | Noyinmai | - | Good health |
| 15. | Muyarchi | - | Perseverance |
| 16. | Vetri | - | Success |

## பதினாறு பேறுகள்

1. புகழ்
2. கல்வி
3. வலிமை
4. வெற்றி
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. நல்லூழ்
9. நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. பெருமை
13. இளமை
14. துணிவு
15. நோயின்மை
16. வாழ்நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!

1. புகழோடு வாழ வேண்டும்.
2. கண் போன்ற கல்வியை கற்று வாழ்தல் வேண்டும்.
3. வலிவுடனும், பொலிவுடனும் வாழ வேண்டும்.
4. வெற்றி, வீரத்துடன் வாழ்தல் வேண்டும்.
5. நன்மைகளைப் பெற்று வாழ வேண்டும்.
6. பொன்னோடும், பொருளோடும் வாழ வேண்டும்.
7. உழவு செய்து நெற்களஞ்சியத்துடன் வாழ வேண்டும்.
8. நல்ல ஊழ் நமக்குத் துணை நிற்க வேண்டும்.
9. பாடுபட்டுத் தேடிய பலனை அனுபவிக்க பாக்கியம் வேண்டும்.
10. பிறர் துன்பம் போக்கிட பரந்த மனம் வேண்டும்.
11. பிறர் நம்மைக் கண்டு பழிக்காமல் வாழ்தல் வேண்டும்.
12. படாடோபமின்றி பண்புடன் வாழ வேண்டும்.
13. இளமையோடு இல்லறத்தில் வாழ வேண்டும்.
14. அடுத்தவர்களுக்கு அஞ்சாமல் வாழ வேண்டும்.
15. நோயின்றி சுகமுடன் வாழ வேண்டும்.
16. நீண்ட நாட்கள் முதிர்ந்த வயதோடு வாழ வேண்டும்.

## CHALDEAN NUMEROLOGY

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக்கு 20 கட்டளைகள்

1. தினமும் அரைநாள் (12 மணிநேரம்) கடுமையாக உழையுங்கள்.
2. வாய்ப்புக்கள் திறக்கும் சாவி உழைப்புத்தான்.
3. வெற்றி ஒன்றையே மனம் நினைக்க வேண்டும்.
4. வெற்றி ஏணியில் ஒவ்வொரு படியாகத்தான் ஏறவேண்டும்.
5. ஒருமரத்தின் உச்சியை அடைய இரண்டு வழிகள் உண்டு.
6. ஒன்று யாராவது ஏற்றி விடுவார்கள் என்று காத்திருப்பது. மற்றொன்று நாமே ஏறுவது.
7. வியாபார அபாயங்களைக் கண்டு அஞ்சக் கூடாது.
8. பிடித்த காரியத்தை செய்ய வேண்டும் என்பதை விட செய்யும் காரியத்தை நமக்குப் பிடித்ததாய் ஆக்கிக் கொள்ள வேண்டும்.
9. "முடியாது, நடக்காது" போன்ற வார்த்தைகளைச் சொல்லவே கூடாது.
10. பாதுகாப்பாய் ஒரே இடத்தில் இருப்பது வளர்ச்சிக்கு உதவாது.
11. வெற்றிக்கு தேவை பாதி அதிஷ்டம், பாதி அறிவு.
12. துணிச்சலாய் முடிவுகள் எடுக்க வேண்டும்.
13. நீங்கள் சம்பாதிப்பதை விட அதிகம் உழைக்க வேண்டும்.
14. மற்றவர்களை உங்களுக்காக உழைக்க வைப்பதில் புத்திசாலித் தனம் இருக்கிறது.
15. வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.
16. எதையும் நாளை என்று தள்ளிப்போடக் கூடாது.
17. கைக்கடிகாரத்தை கொடுத்து விட்டு அலாரம் கடிகாரம் வாங்குங்கள்.
18. மற்றவர்கள் நம்மை வழிநடத்த வேண்டும் என்று நினைக்கக் கூடாது.
19. கவலைப் படாதீர்கள். கவலையில் எந்த நன்மையும் கிடைக்காது.
20. சந்தோஷத்தைக் கொடுப்பது பணம் மட்டுமல்ல. கடவுளை நம்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ideal Weight Chart

| MALE | | FEMALE | |
|---|---|---|---|
| Height | Ideal Weight | Height | Ideal Weight |
| 4' 6" | 28 - 35 Kg | 4' 6" | 28 - 35 Kg |
| 4' 7" | 30 - 39 Kg | 4' 7" | 30 - 37 Kg |
| 4' 8" | 33 - 40 Kg | 4' 8" | 32 - 40 Kg |
| 4' 9" | 35 - 44 Kg | 4' 9" | 35 - 42 Kg |
| 4' 10" | 38 - 46 Kg | 4' 10" | 36 - 45 Kg |
| 4' 11" | 40 - 50 Kg | 4' 11" | 39 - 47 Kg |
| 5' 0" | 43 - 53 Kg | 5' 0" | 40 - 50 Kg |
| 5' 1" | 45 - 55 Kg | 5' 1" | 43 - 52 Kg |
| 5' 2" | 48 - 59 Kg | 5' 2" | 45 - 55 Kg |
| 5' 3" | 50 - 61 Kg | 5' 3" | 47 - 57 Kg |
| 5' 4" | 53 - 65 Kg | 5' 4" | 49 - 60 Kg |
| 5' 6" | 55 - 68 Kg | 5' 6" | 51 - 62 Kg |
| 5' 7" | 58 - 70 Kg | 5' 7" | 53 - 65 Kg |
| 5' 8" | 60 - 74 Kg | 5' 8" | 55 - 67 Kg |
| 5' 9" | 63 - 76 Kg | 5' 9" | 57 - 70 Kg |
| 5' 10" | 65 - 80 Kg | 5' 10" | 59 - 72 Kg |
| 5' 11" | 67 - 83 Kg | 5' 11" | 61 - 75 Kg |
| 6' 0" | 70 - 85 Kg | 6' 0" | 63 - 77 Kg |
| | 72 - 89 Kg | | 65 - 80 Kg |

## பெயரின் முன் அமையும் ஆங்கில எழுத்துக்களின் தன்மை

A – மேன்மை
B – உணர்ச்சி
C – சாதனை
D – துணிவு
E – சூழ்நிலைக்கு ஒத்துப்போதல்
F – சச்சரவு
G – மிதமிஞ்சிய நம்பிக்கை
H – ஜனவசியம்
I – விடாமுயற்சி
J – நிர்வாகம்
K – கருணை
L – காரியவாதி
M – உழைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பு எண் கூட்டெண்களுக்கு அமைய வேண்டிய பெயர் எண்

| பி | கூ | பெ | பி | கூ | பெ | பி | கூ | பெ | பி | கூ | பெ | பி | கூ | பெ | பி | கூ | பெ | பி | கூ | பெ | பி | கூ | பெ | பி | கூ | பெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 5 | 2 | 1 | 5 | 3 | 1 | 1 | 4 | 1 | 5 | 5 | 1 | 1 | 6 | 1 | 6 | 7 | 1 | 5 | 8 | 1 | 5 | 9 | 1 | 6 |
| 1 | 2 | 5 | 2 | 2 | 1 | 3 | 2 | 1 | 4 | 2 | 1 | 5 | 2 | 1 | 6 | 2 | 1 | 7 | 2 | 1 | 8 | 2 | 5 | 9 | 2 | 6 |
| 1 | 3 | 5 | 2 | 3 | 1 | 3 | 3 | 1 | 4 | 3 | 1 | 5 | 3 | 1 | 6 | 3 | 6 | 7 | 3 | 6 | 8 | 3 | 5 | 9 | 3 | 1 |
| 1 | 4 | 1 | 2 | 4 | 1 | 3 | 4 | 1 | 4 | 4 | 1 | 5 | 4 | 1 | 6 | 4 | 1 | 7 | 4 | 1 | 8 | 4 | 5 | 9 | 4 | 1 |
| 1 | 5 | 1/5 | 2 | 5 | 1/5 | 3 | 5 | 1/5 | 4 | 5 | 1 | 5 | 5 | 1 | 6 | 5 | 1 | 7 | 5 | 1 | 8 | 5 | 5 | 9 | 5 | 1 |
| 1 | 6 | 1/6 | 2 | 6 | 1 | 3 | 6 | 1 | 4 | 6 | 6 | 5 | 6 | 1 | 6 | 6 | 6 | 7 | 6 | 1 | 8 | 6 | 5 | 9 | 6 | 1 |
| 1 | 7 | 1 | 2 | 7 | 1 | 3 | 7 | 1 | 4 | 7 | 1 | 5 | 7 | 1/5 | 6 | 7 | 6 | 7 | 7 | 1 | 8 | 7 | 5 | 9 | 7 | 1 |
| 1 | 8 | 5 | 2 | 8 | 5 | 3 | 8 | 5 | 4 | 8 | 5 | 5 | 8 | 5 | 6 | 8 | 5 | 7 | 8 | 5 | 8 | 8 | 5 | 9 | 8 | 5 |
| 1 | 9 | 6 | 2 | 9 | 6 | 3 | 9 | 6 | 4 | 9 | 6 | 5 | 9 | 6 | 6 | 9 | 6 | 7 | 9 | 6 | 8 | 9 | 5 | 9 | 9 | 6/9 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mother's Chinese Age at Time of Conception

| | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Jan | G | B | G | B | B | G | B | G | B | G | B | B | B | G | B | B | G | B | G | B | G | B | G |
| Feb | B | G | B | B | G | B | G | B | G | B | G | G | G | B | G | B | B | G | B | G | B | G | B |
| Mar | G | G | B | G | B | B | B | G | B | G | G | B | B | B | B | G | B | B | G | B | G | B | G |
| Apr | B | G | G | B | B | G | G | B | G | G | G | G | G | B | G | B | G | B | B | B | B | G | B |
| May | B | G | B | B | G | G | G | G | G | B | G | G | G | G | G | G | B | G | B | B | G | B | G |
| Jun | B | G | G | G | B | B | B | G | G | B | G | G | G | G | G | G | G | B | G | G | B | G | B |
| Jul | B | G | G | B | B | G | G | B | B | B | G | G | G | G | G | G | G | G | B | G | B | B | G |
| Aug | B | G | B | G | G | B | B | B | B | B | G | G | G | B | G | B | G | B | G | B | G | B | B |
| Sep | B | G | G | B | G | B | G | B | B | B | G | G | G | G | G | G | B | G | B | G | B | G | B |
| Oct | G | G | G | B | G | B | G | B | B | G | G | G | G | G | G | G | B | B | G | B | G | B | G |
| Nov | B | G | G | B | G | B | G | G | G | G | B | G | G | G | B | B | B | G | B | G | B | G | B |
| Dec | B | G | G | G | G | B | G | B | G | G | B | B | B | B | B | B | B | B | G | G | G | B | G |

G - Girl B - boy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நகரங்களுக்கிடையிலான தூரம்

| | Anuradapura | Avissawella | Badulla | Batticaloa | Chenkaladi | colombo | Dambulla | Galle | Hakgamulla | Hambantota | Jaffna | Kalutara | Kandy | Kankesanthurai | Kegalle | Kurunagala | madampe | Mannar | Maradankadawala | Matale | Matara | Madawachchiya | Nonagama | Nuwara Eliya | panadura | Polmadulla | Polonnaruwa | Puttalam | Ratnapura | talaimannar | Trincomalee | Valachchenai | Vavuniya | Wellawaya |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Vavuniya | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 314 |
| Valachchenai | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 206 | 179 |
| Trincomalee | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 108 | 97 | [illegible] |
| talaimannar | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 201 | 291 | 105 | 430 |
| Ratnapura | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 365 | 283 | 296 | 280 | 121 |
| Puttalam | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 208 | 212 | 180 | 340 | 127 | 295 |
| Polonnaruwa | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 175 | 241 | 227 | 129 | 64 | 142 | 243 |
| Polmadulla | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 281 | 225 | 19 | 383 | 403 | 278 | 299 | 101 |
| panadura | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 69 | 243 | 159 | 69 | 267 | 285 | 307 | 282 | 190 |
| Nuwara Eliya | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 182 | 129 | 217 | 206 | 148 | 341 | 259 | 224 | 296 | 87 |
| Nonagama | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 132 | 177 | 89 | 340 | 314 | 108 | 273 | 383 | 275 | 388 | 97 |
| Madawachchiya | | | | | | | | | | | | | | | | | | | | | | | 382 | 230 | 256 | 274 | 116 | 101 | 254 | 111 | 109 | 380 | 26 | 319 |
| Matara | | | | | | | | | | | | | | | | | | | | | | 384 | 61 | 245 | 132 | 156 | 377 | 293 | 165 | 501 | 418 | 336 | 415 | 158 |
| Matale | | | | | | | | | | | | | | | | | | | | | 308 | 127 | 286 | 103 | 169 | 387 | 114 | 154 | 167 | 238 | 156 | 179 | 153 | 192 |
| Maradankadawala | | | | | | | | | | | | | | | | | | | | 79 | 341 | 48 | 314 | 182 | 308 | 225 | 50 | 308 | 206 | 150 | 98 | 132 | 74 | 431 |
| Mannar | | | | | | | | | | | | | | | | | | | 132 | 211 | 473 | 84 | 446 | 314 | 340 | 357 | 200 | 185 | 338 | 32 | 174 | 264 | 77 | 402 |
| madampe | | | | | | | | | | | | | | | | | | 370 | 238 | 200 | 137 | 266 | 76 | 142 | 101 | 13 | 274 | 238 | 32 | 398 | 315 | 290 | 312 | 114 |
| Kurunagala | | | | | | | | | | | | | | | | | 151 | 229 | 87 | 68 | 254 | 135 | 227 | 119 | 121 | 138 | 122 | 87 | 119 | 246 | 164 | 187 | 161 | 206 |
| Kegalle | | | | | | | | | | | | | | | | 32 | 133 | 255 | 119 | 64 | 238 | 167 | 211 | 103 | 105 | 122 | 154 | 119 | 103 | 278 | 198 | 219 | 193 | 190 |
| Kankesanthurai | | | | | | | | | | | | | | | 352 | 320 | 473 | 237 | 233 | 312 | 575 | 185 | 547 | 415 | 344 | 459 | 301 | 286 | 439 | 264 | 256 | 365 | 159 | 302 |
| Kandy | | | | | | | | | | | | | | 323 | 39 | 42 | 174 | 237 | 305 | 26 | 177 | 153 | 249 | 77 | 143 | 161 | 140 | 129 | 142 | 264 | 182 | 204 | 179 | 164 |
| Kalutara | | | | | | | | | | | | | 159 | 457 | 121 | 137 | 109 | 356 | 224 | 155 | 118 | 272 | 177 | 192 | 16 | 97 | 239 | 175 | 77 | 383 | 301 | 323 | 298 | 198 |
| Jaffna | | | | | | | | | | | | 439 | 320 | 18 | 335 | 303 | 454 | 219 | 216 | 295 | 557 | 187 | 529 | 398 | 423 | 441 | 283 | 369 | 422 | 246 | 238 | 348 | 142 | 484 |
| Hambantota | | | | | | | | | | | 546 | 193 | 245 | 568 | 227 | 243 | 92 | 462 | 330 | 270 | 77 | 378 | 16 | 167 | 232 | 105 | 323 | 330 | 124 | 489 | 367 | 259 | 404 | 80 |
| Hakgamulla | | | | | | | | | | 121 | 465 | 158 | 145 | 483 | 171 | 187 | 74 | 381 | 249 | 171 | 198 | 296 | 137 | 68 | 158 | 61 | 282 | 274 | 80 | 409 | 325 | 216 | 333 | 40 |
| Galle | | | | | | | | | 222 | 122 | 512 | 72 | 232 | 529 | 192 | 209 | 243 | 426 | 296 | 257 | 45 | 344 | 106 | 290 | 89 | 161 | 332 | 248 | 150 | 455 | 373 | 381 | 370 | 203 |
| Dambulla | | | | | | | | 264 | 217 | 298 | 248 | 192 | 72 | 266 | 87 | 59 | 308 | 164 | 32 | 47 | 309 | 80 | 282 | 150 | 175 | 193 | 68 | 140 | 174 | 192 | 189 | 132 | 106 | 232 |
| colombo | | | | | | | 148 | 116 | 182 | 238 | 396 | 43 | 116 | 414 | 77 | 93 | 134 | 312 | 189 | 142 | 161 | 229 | 222 | 180 | 27 | 121 | 216 | 132 | 101 | 340 | 257 | 280 | 254 | 222 |
| Chenkaladi | | | | | | 286 | 148 | 365 | 200 | 245 | 364 | 330 | 171 | 381 | 209 | 203 | 274 | 280 | 145 | 196 | 320 | 195 | 259 | 208 | 314 | 282 | 80 | 256 | 280 | 307 | 124 | 16 | 272 | 163 |
| Batticaloa | | | | | 14 | 303 | 163 | 381 | 216 | 261 | 378 | 346 | 187 | 396 | 225 | 417 | 290 | 299 | 363 | 212 | 336 | 211 | 275 | 224 | 328 | 278 | 98 | 270 | 296 | 322 | 138 | 31 | 237 | 179 |
| Badulla | | | | 167 | 151 | 230 | 206 | 256 | 48 | 134 | 454 | 206 | 134 | 471 | 159 | 175 | 122 | 370 | 332 | 159 | 211 | 286 | 150 | 56 | 198 | 129 | 233 | 262 | 129 | 398 | 277 | 167 | 312 | 53 |
| Avissawella | | | 172 | 285 | 269 | 58 | 130 | 142 | 124 | 187 | 378 | 69 | 98 | 396 | 60 | 78 | 76 | 295 | 163 | 124 | 187 | 211 | 150 | 122 | 60 | 63 | 198 | 163 | 42 | 322 | 240 | 262 | 237 | 164 |
| Anuradapura | | 196 | 272 | 196 | 182 | 206 | 66 | 322 | 274 | 384 | 195 | 249 | 138 | 212 | 153 | 121 | 272 | 111 | 34 | 113 | 367 | 27 | 348 | 216 | 233 | 259 | 101 | 74 | 240 | 138 | 196 | 166 | 33 | 298 |
| Ambepussa | 154 | 42 | 177 | 243 | 227 | 60 | 89 | 175 | 166 | 209 | 336 | 103 | 56 | 354 | 18 | 34 | 118 | 253 | 121 | 82 | 220 | 169 | 193 | 121 | 87 | 106 | 156 | 121 | 85 | 260 | 198 | 220 | 195 | 206 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்ப
விளக்காய்த் திகழ்ந்து எம்மை எல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு இன்று
அமரத்துவம் அடைந்துவிட்ட எங்கள் குடும்பத்
தலைவி அவர்களின் இறுதி கிரியைகளில்
பங்கு பற்றியோருக்கும், பல வழிகளிலும் உதவி
புரிந்த அன்பும் பண்பும் கொண்ட அனைத்து
உள்ளங்களுக்கும், உள்நாட்டிலும்,
வெளிநாட்டிலும் தொலைபேசி மூலம்
அனுதாபம் தெரிவித்தோருக்கும், ஈமக்கிரியை,
அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்தியத்தில்
பங்கு பற்றியோருக்கும், இம்மலரை அச்சிட்டு
உதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும்
நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

*321, Burges Road*
*Eastham*
*E 62 ES*
*London.*



இங்ஙனம்
குடும்பத்தினர்.

# வம்சா வழி

♦ சரவணமுத்து + சின்னப்பிள்ளை ♦

- ♦ இராசா + சிவநேசம்
- ♦ உருக்குமணி + ♦ இராஜரட்ணம்
- ♦ கனகரத்தினம் + ♦ பூரணம்
- ♦ **செல்லம்மா** + ♦ தம்பையா
- ♦ கமலம் + ♦ இராஜரட்ணம்

♦ சின்னத்தம்பி + சின்னாச்சிப்பிள்ளை ♦

செல்லம்மா + தம்பையா:

- ரஞ்சினி + குலசேகரம்
  - பிரியங்கா
  - பிரதீபா
- ரவீந்திரன் + சுகந்தி
- ரசி + ரவீந்திரன்
  - கார்த்தியா
  - கிரிசாந்
- ரதி + மகிந்தா
  - அதியன்ராஜா
  - ஆர்தன்ராஜா
  - ஆர்த்தி
- ராதை + லோகநாதன்
  - பிரியதர்சினி (பூஜா)
  - பிரியாந்தி (சிந்து)
- ராகினி + ரவீந்திரன்
  - வக்சன்
  - தனுசன்
  - சரன்


♦ அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் என்பதே அறிவு



பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்.

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

- கவிஞர் கண்ணதாசன் -

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org